மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதியமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எழாது.

107—

விளவங்கோடு தொகுதியிலுள்ள கிராமங்களுக்கு போக்கு வரத்து வசதி ஏற்படுத்தல்.

*15092—திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளவங்கோடு தொகுதியில் பல்வேறு கிராமங்கள் பேருந்து வசதியற்ற நிலையில் இருப்பது அரசிற்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அக் கிராமங்களுக்கு போக்குவரத்து வசதி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): விளவங்கோடு தொகுதியில் வாறு தட்டு என்ற கிராமம் மட்டுமே தற்போது பேருந்து வசதி பெறாத கிராமமாகும். இக்கிராமத்திற்கும் பேருந்து வசதி அளித்திட நேசமணி போக்குவரத்துக் கழகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.